# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 77 / 2019

| Deposition of Witness for | Prosecution PW4 |
|---|---|
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Venkatesh |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 18th day of August, 2025.

**(A 1, A2 are present)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருவண்ணாமலை, அரசு பேருந்து போக்குவரத்து கழகம், கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31/10/2018 அன்று நான் ஆரணி பேருந்து பணிமனையில் கிளை மேலாளராக பணியில் இருந்தேன். அப்போது

பேருந்து எண் TN 25 N 326 என்ற அரசுப் பேருந்து தடம் எண் 202Y சுமார் 8.50 மணியளவில் பேருந்தில் பணிபுரிந்து ஓட்டுநர் திரு. தமிழ்வாணன், DR 45958, என்பவர் என்னிடம் கைப்பேசி மூலமாக தொடர்பு கொண்டு ஒரு நபர் பாப்பன் சத்திரம் என்ற இடத்தில் சாலையை கடக்க முயன்றதில் டிரைவருக்கும் அவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டு அவர் பேருந்தின் பின்பக்க கண்ணாடியை கல் எறிந்து உடைத்தார் என்று தகவல் அளித்தார். நான் அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு சென்று வழக்கு பதிவு செய்ய அறிவுறுத்தினேன். பணிமனையிலிருந்து ஒரு அலுவலரை அனுப்பி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஏற்பாடுசெய்தேன். பேருந்தின் சேதாரம் குறித்து ஆய்வு செய்து எனக்கு தகவல் தெரிவித்தார். அதனடிப்படையில் சேதாரம் ஆன கண்ணாடியின் மதிப்பு ரூபாய் 6,500, Rubber beeding ரூபாய் 1,800, Labour ரூபாய் 400 ஆக மொத்தம் ரூபாய் 8,700 சேதமதிப்பு என்று காவல் துறைக்கு சேதமதிப்பு சான்றிதழ் வழங்கினேன். மேற்படி சேதமதிப்பு சான்றிதழ் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுகுறித்து நசரத்பேட்டை காவல்நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

காவல் துறையினர் சேதமதிப்பு கொடுப்பதற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்களா என்றால் இல்லை. சேதமதிப்பு சான்றிதழில் டிப்போ எண், அலுவலக கோப்பு எண், தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வழங்கிய சேதமிப்பு சான்றிதழ் எந்த தேதியில் வழங்கினேன் என்ற குறிப்பில்லை என்றால் தேதி குறிப்பிட்டுள்ளேன். 07/11/2018 என தேதி குறிப்பிட்டுள்ளேன். பொதுவாக வாகனங்கள் சேதாரம் குறித்து சேதாரம் சான்றிதழ் வழங்க District motor Vehicle Inspector வழங்கவேண்டும் என்றால் அரசு போக்கு வரத்து கழகத்தை பொறுத்தவரையில் எங்களுக்கு கிளை மேலாளர் சேதமதிப்பு விவரத்தை வழங்குவது வழக்கம். சேதம் அடைந்த வாகனகத்தை நான் எங்குசென்று பார்த்தேன் என்றால் பேருந்து பணிமனை வந்தபோது பார்த்தேன். எங்கள் பணிமனையில் Purchase Order யார் பார்க்கிறார்கள் என்றால் அதற்கென தனிப்பரிவு

உள்ளது. அதை நாங்கள் பராமரிப்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பேருந்து சேதம் அடையும்போது கொள்முதல் பிரிவில் அளிக்கும் மதிப்பீட்டின் அடிப்படையில் சேதமதிப்பு சான்றிதழ் கொடுக்கிறோம். அதற்கான கொள்முதல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். சேதமதிப்பு சான்றிதழை போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.